# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. 98/ of 2016 |
| Deposition of witness for | Prosecution PW-1<br>Defence<br>Court |

Name: ஆனந்தி,

Father's Name: W/o கதிரவன்

Village: சோழபுரம்

Taluk: கா.ட்.கோவில்.

Caste: வன்னியர்

Calling: விவசாயம்

Religion: இந்து

Age: 31

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

the day of 200

K. ஆனந்தி

27.3.2017
அ.சா.1

மு.வி.

நான் அகர சோழநகரத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 13.9.2015ஆம் தேதியன்று இரவு 8.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்த போது, எங்கள் தெருவில் உள்ள எனது பெரிய மாமியார் ராதா என்பவருக்கும், 1வது எதிரி வெற்றிவேல் என்பவருக்குமிடையே சண்டை நடந்து கொண்டிருந்தது. அப்போது நான் எனது வீட்டில் வாசலில் அமர்ந்திருந்தேன். நான் பெரிய மாமியார் வீட்டிற்கு சென்று 1வது எதிரியிடம் ஏன் சண்டை வளர்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1வது எதிரி நீ என்ன சப்போர்ட்டாடி நீ வந்து கேட்பதற்கு என்று சொல்லி நான் அணிந்திருந்த நைட்டி, பாவாடை, உள்ளாடைகளை கிழித்துவிட்டார். அப்போது எங்கள் தெருவில் துரைராஜன் என்பவரது வீட்டில் நடந்த கருமாதிக்கு சென்றிருந்த எனது தாயார் வசந்தி என்பவர் சத்தம் கேட்டு வந்து 1வது எதிரியைகேட்டதற்கு எதிரிகள் அனைவரும் சேர்ந்து எனது தாயாரை தாக்கினார்கள். 1வது எதிரி என்னை தாக்கிய போது அங்கு வந்த மற்ற எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து என்னை கட்டைக்கழியால் தாக்கினார்கள். அதை எனது தாயார் வசந்தி என்பவர் கேட்ட போதுதான் அவரையும் எதிரிகள் தாக்கினார்கள்.

27-3-17
DISTRICT MUNSIF-
CUM JUDL. MAGISTRATE
KATTUMANNARKOIL

K. ஆனந்தி

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
காட்டுமன்னார்கோயில்.

சி.சி.93/2016

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா2 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வசந்தி | ஊர் | அகர சோழதரம் |
| கணவர் பெயர் | முத்து கண்ணன் | வட்டம் | காட்டுமன்னார்கோயில் |
| வயது | 50 | மாவட்டம் | கடலூர் |
| தொழில் | | | |
| காவல் நிலையம் | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)**-ன் விதிமுறைகளின் படி **16.10.2025** நாளாகிய இன்று திரு. **M.Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்

(எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு **317**ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அகர சோழதரத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரிகள் வெற்றிவேல், ஆதி லெட்சுமி, ஜெயக்கொடி, மின்னல் ராஜா இவர்களை தெரியும். அ.சா.1 எனது மகள். ப.சா.3,4 ஆகியோரை தெரியும். 13.09.2015ந் தேதி இரவு 8.00 மணிக்கு ப.சா.3 ராதாவிற்கும், எதிரிகளுக்கும் சண்டை நடந்தது. அப்போது ஆதி லெட்சுமி, மின்னல் கொடி, கார்த்திக், வெற்றிவேல் ஆகியோர் கூடி எனது மகளை முடியை பிடித்து இழுத்து நைட்டியை கிழித்து அடித்து அவமானம் படுத்தினார்கள். நாங்கள் போய் சண்டையை விலக்கிவிட்டோம். என்னையும் அடித்துவிட்டனர். ராதா எனது சம்மந்தி, அ.சா.1ன் வீடும், எதிரிகளின் வீடும் பக்கத்து பக்கத்து வீடு ஆகும். அவர்கள் அடித்துப்போட்ட பின்பு அனைவரையும் மருத்துமனைக்கு அழைத்துச் சென்றோம். போலீசார் மறுநாள் என்னை விசாரித்தனர். நாங்கள் ஸ்ரீமுஷ்ணம் போகும் ரோட்டில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறோம்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை

ம. வசந்தி

Read Over by me in Open Court in the Presence of the Accused Readover of the Witness and Admitted by him / her to be correct

16.10.25

DISTRICT MUNSHIF - CUM JUDICAL MAGISTRATE KATTUMANNARKOIL

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**காட்டுமன்னார்கோயில்.**

**சி.சி.93/2016**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா 3 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதா | ஊர் | அகர சோழதரம் |
| கணவர் பெயர் | சுந்தரராஜலு | வட்டம் | காட்டுமன்னார்கோயில் |
| வயது | 75 | மாவட்டம் | கடலூர் |
| தொழில் | | | |
| காவல் நிலையம் | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)**-ன் விதிமுறைகளின் படி **16.10.2025** நாளாகிய இன்று திரு. **M.Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்

**(**எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு **317**ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

முதல் விசாரணை

நான் அகர சோழதரத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரிகள் வெற்றிவேல், ஆதி லெட்சுமி, ஜெயக்கொடி, மின்னல் ராஜா இவர்களை தெரியும். அ.சா.1 எனது மறுமகள்.அ.சா.2 என் சம்மந்தி. ப.சா.4 ஐ தெரியும். 13.09.2015 ந் தேதி இரவு 8.00 மணிக்கு நான் எனது மறுமகள் வீட்டிற்கு போனேன். அங்கே சண்டை நடந்தது. அப்போது எதிரி வெற்றிவேல், கார்த்திக், ஜெயக்கொடி, மின்னல் ராஜா ஆகியோர் எனது மறுமகளை அடித்துக்கொண்டு இருந்தனர். நான் கேட்டப்போது என்னையும் அடித்தனர். அப்போது அங்கிருந்து 2 நபர்கள் வந்து விலக்கிவிட்டனர். அதன்பின்பு போலீசார் எங்களை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.

(LTI ராதா)

Read Over by me in open court in the presence of the Accused Readover of the Witness and Admitted by him / her to be correct.

16.10.25

DISTRICT MUNSHIF - CUM
JUDICAL MAGISTRATE
KATTUMANNARKOIL

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,</u>

<u>காட்டுமன்னார்கோயில்.</u>

**சி.சி.93/2016**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா 4 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோதி | ஊர் | அகர சோழதரம் |
| தந்தை பெயர் | பெரியசாமி | வட்டம் | **காட்டுமன்னார்கோயில்** |
| வயது | **58** | மாவட்டம் | கடலூர் |
| தொழில் | . | | |
| காவல் நிலையம் | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)**-ன் விதிமுறைகளின் படி **16.10.2025** நாளாகிய இன்று திரு. **M.Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்

(எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு **317**ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை

நான் அகர சோழதரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 ஐ தெரியும். எதிரிகள் வெற்றிவேல், ஆதி லெட்சுமி, ஜெயக்கொடி, மின்னல் ராஜா இவர்களை தெரியும். 13.09.2015ந் தேதி இரவு 8.00 மணிக்கு எங்கள் தெருவில் சண்டை நடந்துக்கொண்டு இருந்தது. நான் போய் விலக்கிவிட்டேன். சண்டையின்போது எதிரிகள் வெற்றிவேல், கார்த்திக், ஜெயக்கொடி, மின்னல் ராஜா ஆகியோர் ஆனந்தியை அடித்து நைட்டியை கிழித்தனர். என்னுடன் ராமகிருஷ்ணன் என்பவர் சண்டையை விலக்கிவிட்டார். அதன்பின்பு போலீசார் என்னை மறுநாள் விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.

P. ஜோதி

...ead Over by me in Open Court in the ...esence of the Accused Readover of the Witness and Admitted by him / her to be ...rrect.

16.10.2025

DISTRICT MUNSHIF - CUM
JUDICAL MAGISTRATE
KATTUMANNARKOIL

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
காட்டுமன்னார்கோயில்.

சி.சி.93/2016

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா 5 வாக்குமூலம்

| பெயர் | ராமகிருஷ்ணன் | ஊர் | அகர சோழதரம் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | சின்னப்பன் | வட்டம் | காட்டுமன்னார்கோயில் |
| வயது | 70 | மாவட்டம் | கடலூர் |
| தொழில் | | | |
| காவல் நிலையம் | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)**-ன் விதிமுறைகளின் படி **16.10.2025** நாளாகிய இன்று திரு. **M.Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்

**(**எதிரிகள் ஆஜர் இல்லை**.** கு.வி.மு.ச.பிரிவு **317**ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது**.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**.** அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

முதல் விசாரணை

நான் அகர சோழதரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 ஐ தெரியும். எதிரிகள் வெற்றிவேல், ஆதி லெட்சுமி, ஜெயக்கொடி, மின்னல் ராஜா இவர்களை தெரியும். 13.09.2015 ந் தேதி இரவு 8.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தப்போது எங்கள் தெருவில் சண்டை நடந்துக்கொண்டு இருந்தது. நான் போய் விலக்கிவிட்டேன். சண்டையின்போது எதிரிகள் வெற்றிவேல், கார்த்திக், ஜெயக்கொடி, மின்னல் ராஜா ஆகியோர் ஆனந்தியை அடித்து பிடித்து இழுத்தார்கள். என்னுடன் அ.சா.4 சண்டையை விலக்கிவிட்டார். அதன்பின்பு போலீசார் என்னை மறுநாள் விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.

ரா. ராமகிருஷ்ணன்

... by me in open court in the presence of the Accused Read over to the witness and Admitted by him / her to be correct

16.10.25

DISTRICT MUNSHIF-CUM
JUDICAL MAGISTRATE
KATTUMANNARKOIL

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்டுமன்னார்கோயில்.

சி.சி.93/2016

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா.6 வாக்குமூலம் (ப.சா.6)

| பெயர் | முத்துகண்ணன் | ஊர் | அகரசோழதரம் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | கோவிந்தராஜலு | வட்டம் | |
| வயது | 55 | மாவட்டம் | |
| தொழில் | | | |
| காவல் நிலையம் | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)**-ன் விதிமுறைகளின் படி **13.11.2025** நாளாகிய இன்று திரு. **M.Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் அகர சோழதரத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி கதிரவனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை 14.09.2015 அன்று காலை 10.00 மணிக்கு கதிரவன் வீட்டின் அருகே போலீசார் வந்து இந்த சண்டை நடந்தது தொடர்பாக வரைபடம் தயார் செய்யப்போவதாகவும் அதற்கு சாட்சியாக போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க நானும் கதிரவன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய வீடு இருப்பது அகரசோழதரத்தில் பள்ளி வாசல் தெரு ஆகும். எதிரிகள் வீடு இருக்கும் தெருவும் பள்ளிவாசல் தெரு தான். எனது வீட்டிற்கும் எதிரிகள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 300 மீ. தூரம் இருக்கும். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் எனது வீடு காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

முத்துகண்ணன்

மேற்படி வரைபடத்தில் பள்ளிவாசலும் அந்த தெருவில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். அந்த தெருவில் பள்ளிவாசல் இல்லை. மேற்படி வரைபடத்தில் கதிரவன் வீடு காட்டப்படவில்லை என்றால் சரிதான், அந்த தெருவில் கதிரவன் வீடு இல்லை. ராதா என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அக்கா உறவு முறை ஆனால் உடன்பிறந்த அக்கா இல்லை. மேற்படி வரைபடத்தை தயார் செய்த காவல் அதிகாரியின் பெயர் மற்றும் பதவி விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

என்னை கதிரவன் வீட்டின் அருகே வைத்துதான் போலீசார் விசாரித்தனர் என்றால் சரிதான். கதிரவன் என்பவர் வீட்டின் அருகே இந்த வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.

ரா. முத்துகண்ணன்

Taken down by me in open court in the presence of the Accused Reedaver of the witness and Admitted by him / her to be correct

12-11-18

DISTRICT MUNSHIF - CUM
JUDICAL MAGISTRATE
KATTUMANNARKOIL

**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous
Priliminary Register
Sessions

CC.No. 93 of 2016

Prosecutuion PW 7

Depostitions of Prosecution witness for

Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | மருத்துவர் கே. அனுசுயா |
| Husband name | : | செந்தில்குமார் Dr. |
| Village | : | Ariyalur DT |
| Taluk | : | Jayankondam. |
| Calling | : | PW7 (LW8) |
| Religion | : | HINDU. |
| Age | : | 44 |

**1** வது எதிரி ஆஜர். **2** முதல் **4** எதிரிகள் ஆஜரில்லை. அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் . **1** முதல் **4** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். **2** முதல் **4** எதிரிகள் தரப்பில் **355** பா.நா.சு.சா மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act (Central Act 44 of 1969) on the 12th day of February 2026

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் மூத்த குடிமையியல் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 14.09.2015 ந் தேதி காலை 10.30 மணியளவில் காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பொறுப்பில் இருந்தபோது 21 வயது மதிக்கத்தக்க ஆனந்தி என்பவரை அவரது கணவர் கதிரவன் என்பவர் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது 13.09.2015 ந் தேதி இரவு 8.15 மணியளவில் அகர சோழத்தரம் அவரது வீட்டு வாசல் அருகே தெரிந்த பக்கத்து வீட்டை சேர்ந்த

K. Anusu
12/2/26.

ஒருவரால் குச்சியால் தாக்கி முடியையும், ஆடைகளையும் இழுத்து தள்ளியதில் தனக்கு காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். மேலும் அவருக்கு தலையில் வலி இருப்பதாக கூறினார். நான் விபத்து பதிவேடு பதிவு செய்து அவருக்கு முதலுதவி சிசிச்சை அளித்து சிகிச்சையிலிருந்து விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகும்.

அதே நாள் அதே மணிக்கு 40 வயது மதிக்கத்தக்க முத்துக்கண்ணன் என்பவரது மனைவி வசந்தி என்பவரை அவரது மருமகன் கதிரவன் என்பவர் மூலமாக சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது கடந்த 13.09.2015 ந் தேதி இரவு 8.15 மணியளவில் அகரசோழத்தரம் அவரது வீட்டு வாசலில் இருந்தபோது அவருக்குதெரிந்த பக்கத்து வீட்டுக்காரர்களோடு இரும்பு பைப்பாலும், குச்சியாலும் தாக்கியதாவும் நெஞ்சுப் பகுதியில் காலால் மிதித்ததாகவும் கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவர் சுய நினைவுடன் காணப்பட்டார். அவரது மார்பு பகுதி மற்றும் உடலில் வலி இருப்பதாக கூறினார். விபத்து பதிவேட்டில் பதிவு செய்து முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகும். பொதுவாக மேற்சொன்னவாறு தாக்கினால் இத்தகைய காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

காயம் பட்ட இருவருமே தெரிந்த நபர் என்று மட்டுமே கூறியுள்ளார் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இரும்பு பைப், stick பயன்படுத்தியதாக தெரிவித்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களுக்கும் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். அவர்கள் இருவரும் வலி இருப்பதாக மட்டுமே தெரிவித்துள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் அவ்வாறு பொய்யாக கூட சொல்லியிருக்கலாம் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க

G. Alme
12/2/26

அவர்கள்கேட்டுக் கொண்டபடி காயச்சான்றிதழ்கள் வழங்கினேன் என்றாலும் உண்மையில் அவ்வாறு காயங்கள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை

12/2/26

Sinature of witness

Taken down by me in Open Court in the presence of the Accused Read over to the witness and Admitted by him / her to be correct

12.12.20

DISTRICT MUNSHIF - CUM
JUDICAL MAGISTRATE
KATTUMANNARKOIL